தினகனி

செய்திகள் மற்றும் விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253


நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்








| Vol: 02 | Issue: 114 | 4 Pages | 22.11.2024 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 18254 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 114 | 4 பக்கங்கள் | 22.11.2024 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**பகுத்துணடு பல்லுயி ரோம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்று ளெல்லாந் தலை**

**விளக்கம்:**
கிடைத்ததைப் பகுந்து கொடுத்துத் தானும் உண்டு பல உயிர்களையும் காப்பாற்றுதல் அறநூலார் தொகுத்த அறங்கள் எல்லாவற்றிலும் தலையான அறமாகும்.

# பள்ளி ஆசிரியை கொலை செய்யப்பட்டுள்ள இச்சம்பவமானது மிகவும் மிருகத்தனமானது

## தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வருத்தம்

சென்னை, நவ.22

பள்ளி ஆசிரியை கொலை செய்யப்பட்டுள்ள இச்சம்பவமானது மிகவும் மிருகத்தனமானது. தஞ்சை ஆசிரியை ரமணியின் குடும்பத்தினருக்கு ரூ.5 லட்சம் நிவாரணம் வழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் வெளியிட்டுள்ள அறிக்கையில்:


தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், மல்லிப்பட்டினம் அரசு மேல்நிலைப் பள்ளியில் தற்காலிக பட்டதாரி தமிழ் ஆசிரியையாகப் பணிபுரிந்துவந்த செல்வி ரமணி (வயது 26) த/பெ.முத்து அவர்கள் இன்று (20.11.2024) காலை பள்ளி வளாகத்தில் இருந்த போது மதன்குமார் என்ற நபரால் கத்தியால் குத்தப்பட்டு பலத்த காயமடைந்து, சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டுசெல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன். சம்பவம் குறித்து தகவல் அறிந்ததும் உடனடியாக உயர்கல்வித் துறை மற்றும் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்களை உயிரிழந்த ஆசிரியை அவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவிக்க அனுப்பிவைத்தேன்.



பள்ளி ஆசிரியை கொலை செய்யப்பட்டுள்ள இச்சம்பவமானது மிகவும் மிருகத்தனமானது. இச்சம்பவத்தில் ஈடுபட்ட குற்றவாளி காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு அவர்மீது வழக்கு பதியப்பட்டுள்ளது. இவ்வழக்கின் விசாரணை தீவிரமாக கண்காணிக்கப்பட்டு குற்றவாளிக்கு விரைவில் சட்டப்படி தண்டனை பெற்றுத்தரப்படும். கிராமப்புறப் பகுதியில் கல்விப்பணியில் தன்னை ஈடுபடுத்திக்கொண்ட செல்வி ரமணி அவர்களின் உயிரிழப்பு பள்ளிக் கல்வித் துறைக்கும்.

சக ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். செல்வி ரமணி அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்கள், சக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கல்களையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, செல்வி ரமணி குடும்பத்தினருக்கு ரூ.5 இலட்சம் முதலமைச்சரின் பொதுநிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன் என கூறப்பட்டுள்ளது.

# உக்ரைனில் அமெரிக்க தூதரகம் மூடல்




வாஷிங்டன், நவ.22

உக்ரைன் மீது ரஷியா நடத்தி வரும் தாக்குதல் 1,000வது நாளை எட்டி உள்ளது. உக்ரைனுக்கு அமெரிக்கா, உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் ஆதரவு அளித்து வருகின்றன. பதில் தாக்குதல் நடத்துவதற்கு தேவையான ஆயுதங்களையும் வழங்கி உதவுகின்றன.

இந்நிலையில், ரஷியாவிற்குள் தொலைதூரத்திற்கு சென்று இலக்குகளை தாக்கி அழிக்கும் ஏவுகணைகளை பயன்படுத்த அமெரிக்கா அனுமதி அளித்தது. இதனால் கோபம் அடைந்த, ரஷிய அதிபர் புதின் கடும் கண்டனம் தெரிவித்தார். அதுமட்டுமின்றி அவர் ரஷிய படைகள் அணு ஆயுதங்களை பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கி அதற்கான ஆவணத்தில் கையெழுத்திட்டார்.

தற்போது இரு நாடுகள் இடையே போர் தீவிரமடைந்துள்ளது. இந்த சூழலில், அமெரிக்கா தயாரித்த 6 நீண்ட தூர ஏவுகணையை ரஷியாவின் பலபகுதிகளில்ஏவி, உக்ரைன்தாக்குதல்நடத்தியது. இதில் 5 ஏவுகணைகள் சுட்டு வீழ்த்தப்பட்டதாக ரஷியா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் யாருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என்று கூறப்படுகிறது.

இந்தநிலையில், உக்ரைன் தலைநகர் கீவ் நகரில் செயல்பட்டு வந்த அமெரிக்க தூதரகம் தற்காலிகமாக மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தூதரகத்தில் இருப்பவர்கள் உடனடியாக பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல அமெரிக்கா அறிவுறுத்தி உள்ளது. கீவ் நகர் மீது ரஷியா வான்வழித்தாக்குதல் நடத்தக்கூடுமென அஞ்சப்படுவதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தூதரகம் தற்காலிகமாக மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# கயானா சென்றடைந்த பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு




ஜார்ஜ் டவுன், நவ.22

பிரேசில் பயணத்தை நிறைவு செய்துவிட்டு பிரதமர் மோடி கயானா சென்றடைந்தார். ஜார்ஜ் டவுன் சென்றடைந்த பிரதமர் மோடியை விமான நிலையத்தில் கயானா அதிபர் முகமது இர்பான் அலிமற்றும்அவரதுமந்திரிஅவையின்மூத்தஉறுப்பினர்கள்வரவேற்றனர். பின்னர் அந்நாட்டு முறைப்படி பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பும் மரியாதையும் அளிக்கப்பட்டது.

கயானா சென்றுள்ள பிரதமர் மோடி இன்று அந்நாட்டு அதிபர் இர்பான் அலியை சந்தித்து பேச உள்ளார். இந்த சந்திப்பின்போது இரு நாட்டு உறவு, வர்த்தகம் உள்பட பல்வேறு விவகாரங்கள் இருநாட்டு தலைவர்களும் ஆலோசிக்க உள்ளனர்.

இதையடுத்து கயானா நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடி உரையாற்ற உள்ளார். இதனை தொடர்ந்து அங்கு வசிக்கும் இந்திய வம்சாவளியினர் சந்திப்பு நிகழ்ச்சியிலும் பங்கேற்க உள்ளார்.

56 ஆண்டுகளில் இந்திய பிரதமர் ஒருவர் கயானாவுக்கு செல்வது இதுவே முதல்முறை. இதுதொடர்பாக பிரதமர் மோடி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், சிறிது நேரத்திற்கு முன்பு கயானாவில் தரையிறங்கினேன். விமான நிலையத்தில் என்னை வரவேற்க வந்த அதிபர் இர்பான் அலி, பிரதமர் மார்க அந்தோனி பிலிப்ஸ், மூத்த மந்திரிகள் மற்றும் பிற உயரதிகாரிகளுக்கு நன்றி. இந்தபயணம்நமதுநாடுகளுக்கிடையேயானநட்பைஆழப்படுத்தும் என்று நான் நம்புகிறேன் என்று பதிவிட்டுள்ளார்.

# பழங்குடியின மக்களின் உரிமைகளை பறிப்பதா?

## நியூசிலாந்து நாடாளுமன்றம் அருகே 40,000 பேர் போராட்டம்

வெலிங்டன், நவ.22

ஆங்கிலேயர்களுக்கும், நியூசிலாந்தின் பூர்வகுடிகள் என அறியப்படும் மாவோரி பழங்குடியினருக்கும் இடையே 1840ம் ஆண்டு வைதாங்கி ஒப்பந்தம் கையெழுத்தானது. இதில் மாவோரி பழங்குடியின மக்களுக்கு சில சிறப்பு சலுகை மற்றும் உரிமைகள் வழங்கப்பட்டன. ஆனால் இந்த சலுகைகளை பறிக்கும் வகையில் நியூசிலாந்து நாடாளுமன்றத்தில் சமீபத்தில் புதிய சட்டத்திருத்த மசோதா தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மசோதாவுக்கு டி பாடி மாவோரி கட்சி எம்.பி.க்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். மசோதா தொடர்பான விவாதத்தின்போது அக்கட்சியைச் சேர்ந்த இளம் பெண் எம்.பி. ஹானா சட்டத்திருத்த மசோதா நகலை கிழித்தெறிந்தார். பின்னர் தங்களது பாரம்பரிய போர் முழக்கத்தை எழுப்பி நாடாளுமன்றத்திலேயே நடனம் ஆடினார். இதனால் அவையில் பெரும் கூச்சல் குழப்பம் நிலவியது. இதனையடுத்து நாடாளுமன்றத்தை சபாநாயகர் ஒத்திவைத்தார். இது ஒருபுறமிருக்க, சட்டத்திருத்த மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து மாவோரி கட்சியினர் மற்றும் மாவோரி ஆதரவாளர்கள் போராட்டத்தில் குதித்தனர். நாடு முழுவதும் நடைபெற்ற 9 நாள் பேரணி வெலிங்டனில் முடிவடைந்தது. போராட்டத்தின் இறுதிக்கட்டமாக பல்வேறு நகரங்களில் வந்த 40 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தலைநகரில் ஒன்று சேர்ந்து நாடாளுமன்றம் நோக்கி பேரணியாக சென்றனர். சிலர் மாவோரி பழங்குடியினரின் பாரம்பரிய உடை அணிந்து, மாவோரி கொடிகளை ஏந்தி வந்தனர். பேரணியின் முடிவில், நாடாளுமன்றத்திற்கு வெளியே போராட்டத்தில் ஈடுபட்டனர். புதிய சட்ட மசேதா மாவோரி உரிமைகளை பறிப்பதாக குற்றம்சாட்டி முழக்கம் எழுப்பினர். இப்போராட்டத்தால் அங்கு பெரும் பரபரப்பு நிலவியது. நியூசிலாந்து வரலாற்றில் நடந்த மிகப் பெரிய போராட்டங்களில் இதுவும் ஒன்று என கருதப்படுகிறது.

# ரஷ்ய அரசு பெயரில் ரூ.2,000 கோடி முதலீடு பெற்று தருவதாக சென்னை தொழிலதிபரிடம் ரூ.7.32 கோடி மோசடி: 9 பேர் கைது

சென்னை, நவ.22

ரஷ்ய அரசு பெயரில் ரூ.2000 கோடி முதலீடு பெற்றுத் தருவதாக கூறி சென்னை தொழில் அதிபரிடம் ரூ.7.32 கோடி பணம் பெற்று மோசடி செய்த வழக்கில் வட்டாட்சியர் உட்பட 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.



● விஸ்வநாதன், மதன் குமார், தர்மன், ரூபா, விக்னேஷ்வரன்



● சசிகுமார், அருண்ராஜ், குமாரன், நாகேந்திரன்

இதுகுறித்து போலீஸ் தரப்பில் கூறப்படுவதாவது: சென்னை தி. நகரைச் சேர்ந்த பிரபல தொழில் அதிபர் ஒருவர் சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் அண்மையில் புகார் ஒன்று அளித்தார். அதில், “சென்னை ஆழ்வார் பேட்டையில் இந்தோ ரஷ்யன் அசோசியேட் என்ற பெயரில் நிறுவனத்தை நடத்தி வருபவர் அருண்ராஜ்(38). இவர் ஈஞ்சம்பாக்கத்தில் உள்ள ஆலிவ் பீச்சில் வசிக்கிறார். இவர் இந்தோ ரஷ்யன் தொழில் கூட்டமைப்பின் பிரதிநிதி என்று கூறி என்னிடம் அறிமுகமானார்.

மேலும், ரஷ்ய அரசு இந்திய திட்டங்களுக்காக கோடிக்கணக்கில் பணம் முதலீடு செய்ய முன் வந்துள்ளது. திருச்சியில் நான் நடத்தி வரும் வியாபார திட்டத்துக்கு ரூ.2 ஆயிரம் கோடி வரை முதலீடு பெற்றுத்தருவதாகவும் ஆசை வார்த்தை கூறினார். இதற்கு அவர் கமிஷனாக என்னிடமிருந்து ரூ.7 கோடியே 32 லட்சத்து 45,000 பெற்றுக் கொண்டார்.

மேலும், எனது நிறுவனத்தில் ரஷ்ய நிறுவனம் முதலீடு செய்துள்ளதாக போலியான ரஷ்ய அரசின் லோகோ, கொடிகள் மற்றும் தகவல்களை காண்பித்தார். அவை போலி என்பது பின்னர்தான் தெரிய ஆரம்பித்தது. அருண்ராஜையும், அவரது கூட்டாளிகளையும் தொடர்பு கொண்ட போது தொடர்பு கொள்ள முடியவில்லை. எனவே, என்னிடம் மோசடி செய்த அனைவர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்” என புகாரில் தெரிவித்து இருந்தார்.

இதுகுறித்து மத்திய குற்றப்பிரிவு போலீஸார் விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டது. அதன்படி, அப்பிரிவு கூடுதல் காவல் ஆணையர் ராதிகா மேற்பார்வையில் உதவி ஆணையர் சிவா, காவல் ஆய்வாளர் ராஜேஷ் கண்ணா அடங்கிய தனிப்படை போலீஸார் விசாரணை மேற்கொண்டனர். இதில், புகாரில் குறிப்பிட்டிருந்த அனைத்தும் உண்மை என தெரியவந்தது.

இதையடுத்து மோசடிக்கு மூளையாக செயல்பட்டு தலைமறைவாக இருந்த அருண்ராஜ், அவரது கூட்டாளிகள் தஞ்சாவூர் மாவட்டம் புதுக்கோட்டை குமாரன் (43), சோழவரம் நாகேந்திரன் (39) ஆகியோரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 476 பவுன் தங்கம், 400 கிலோ வெள்ளிப் பொருட்கள், ரூ.14.50 லட்சம் ரொக்கம், 11 சொகுசு கார்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

முன்னதாக அருண்ராஜ் கூட்டாளிகளான மதன் குமார், ஓய்வு பெற்ற விஏஓ தர்மன், ரூபா, விக்னேஷ்வரன், டாஸ்மாக் பிரிவு வட்டாட்சியர் விஸ்வநாதன், சசிகுமார் ஆகிய மேலும் 6 பேர் கைதாகினர். தொடர்ந்து விசாரணை நடைபெறுகிறது.

# தரமான சாலை போடாத ஒப்பந்ததாரர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை: அதிகாரிகளுக்கு அமைச்சர் எ.வ.வேலு அறிவுறுத்தல்

சென்னை, நவ.22

ஒப்பந்ததாரர்கள் குறிப்பிட்ட காலத்துக்குள் பணிகளை விரைவாக முடிக்காவிட்டாலும், சாலை தரமாக இல்லாவிட்டாலும் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகளுக்கு, அமைச்சர் எ.வ. வேலு அறிவுறுத்தியுள்ளார்.

சென்னை கிண்டி நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில், நெடுஞ்சாலைத் துறை மூலம் ரூ.16,202 கோடியில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் 74 சாலைப் பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இதில், பணிகளின்போது ஏற்படும் இடர்பாடுகள் குறித்து, அதிகாரிகளுடன் அமைச்சர் எ.வ.வேலு ஆலோசனை நடத்தினார். அப்போது அமைச்சர் பேசியதாவது: அமைக்கப்படும் சாலைகளின் இருபுறமும் வடிகால் வசதி செய்ய வேண்டும். கண்காணிப்புப் பொறியாளர்கள் அனைவரும், சாலைப் பணிகளின் தரம் குறித்து ஆய்வு செய்ய வேண்டும். சாலைப் பணிகளில் குறைபாடு இருந்தால், சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்கள் மட்டுமின்றி, பொறியாளர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நில எடுப்புப் பணிகளில் காலதாமதம் ஏற்படும்போது, கண்காணிப்புப் பொறியாளர்கள், அது தொடர்பாக மாவட்ட ஆட்சியர்களின் கவனத்துக்கு கொண்டு செல்ல வேண்டும். 202122ம் ஆண்டில் முதல்வர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட சில சாலைப் பணிகள் இதுவரை முடிக்கப்படவில்லை. எனவே, விரைவில் இந்தப் பணிகளை முடிக்க வேண்டும். ஒப்பந்ததாரர்கள் குறிப்பிட்ட காலத்துக்குள் பணிகளை முடிக்காவிட்டாலும், சாலை தரமாக இல்லாவிட்டாலும் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நெடுஞ்சாலைத் துறையில் உள்ள ஆய்வு மாளிகைகளை சிறந்த முறையில் பராமரிக்க வேண்டும். தார்சாலைகள் அமைக்கும்போது, அதன் கனம் சரியான அளவில் இருக்கிறதா என்பதை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் அவ்வப்போது கண்காணிக்க வேண்டும். நிலுவையில் உள்ள பணிகளை விரைவாக முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ராமநாதபுரத்தில் நடைபெறும் சாலைப் பணிகளில் சில, 40 சதவீதம் வரை முடிக்கப்படாமல் உள்ளன. இப்பணிகளை விரைவாக முடிக்க வேண்டும். சிஆர்ஐடிபி திட்டத்தின் கீழ் நிலுவையில் உள்ள பணிகளை முடிக்க வேண்டும். இந்த ஆண்டு டிசம்பர் மாதத்துக்குள் அனைத்து பணிகளையும் முடிக்க வேண்டும்.

மேலும், நெடுஞ்சாலைத் துறையின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகு, திட்டங்கள் அலகு, தேசிய நெடுஞ்சாலை அலகு, நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் அலகு, பெருநகர அலகு, சென்னைகன்னியாகுமரி தொழிற்தட திட்ட அலகு, தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்II அலகு மற்றும் தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் ஆகிய அனைத்து அலகுகளிலும் நிலுவைப் பணிகளை விரைவாக முடிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

இந்தக் கூட்டத்தில், நெடுஞ்சாலைத் துறைச் செயலர் ஆர்.செல்வராஜ், தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்ட இயக்குநர் எஸ்.ஏ.இராமன், நெடுஞ்சாலைத் துறையின் முதன்மை இயக்குநர் ஆர்.செல்வதுரை, கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகின் தலைமைப் பொறியாளர் சத்யபிரகாஷ், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய இயக்குநர் எம்.சரவணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# மும்பையிலிருந்து வாங்கி வந்து 10 மடங்கு கூடுதல் விலைக்கு போதை மாத்திரை விற்பனை: ரயில் நிலையத்தில் 6 பேர் கைது

சென்னை, நவ.22

மும்பையில் இருந்து போதை மாத்திரைகளை வாங்கி வந்து 10 மடங்கு விலை வைத்து விற்பனை செய்த 6 பேர் கும்பலை பெரம்பூர் ரயில் நிலையத்தில் போலீசார் சுற்றி வளைத்தனர். வட சென்னையில் இளைஞர்கள் சிலர் வலி நிவாரண மாத்திரைகளை போதைக்காக பயன்படுத்தி அதனால் சுமார் பத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்த சம்பவங்கள் நடந்தன. இதையடுத்து தொடர்ந்து போலீசார் வலி நிவாரண மாத்திரைகளை போதைக்காக பயன்படுத்தும் நபர்களை கைது செய்து வருகின்றனர். மேலும் குறிப்பிட்ட மாத்திரைகளை மருத்துவர் ஒப்புதல் சீட்டு இல்லாமல் தரக்கூடாது என மருந்தகங்களிலும் போலீசார் அறிவுறுத்தி வந்தனர். இதனால் சென்னையில் வலி நிவாரண மாத்திரைகள் விற்பனை ஓரளவுக்கு கட்டுக்கு ள் கொண்டுவரப்பட்டது. எனவே, அதனை வாங்கி விற்பனை செய்பவர்கள் ஆன்லைன் மூலமாகவும் மேலும் வடமாநிலங்களுக்கு ரயில் மூலமாக சென்று அங்கு மாத்திரைகளை வாங்கி வந்து விற்பனை செய்யும் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வந்தன. அந்த வகையில், சென்னையை சேர்ந்த இரண்டு பெண்கள் உள்பட 6 பேர் மும்பைக்குச் சென்று வலி நிவாரண மாத்திரைகளை வாங்கி வரும்போது காவல்துறையிடம் வசமாக பிடிப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. மும்பையில் இருந்து பெரம்பூர் நோக்கி வரும் ரயிலில் சிலர் வலி நிவாரண மாத்திரைகளை மொத்தமாக எடுத்து வருவதாக கீழ்ப்பாக்கம் துணை கமிஷனர் ரகுபதிக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன் அடிப்படையில் தலைமைச் செயலக காலனி இன்ஸ்பெக்டர் சிவக்குமார், சப் இன்ஸ்பெக்டர் கார்த்திகேயன் உள்ளிட்ட போலீசார் நேற்று காலை 7 மணி அளவில் பெரம்பூர் ரயில் நிலையத்தில் தயாராக நின்று கொண்டிருந்தனர். அப்போது மும்பையில் இருந்து சென்ட்ரல் நோக்கி வந்த ரயிலில் இருந்து இறங்கிய நபர்களை தொடர்ந்து கண்காணித்து அதில் 6 பேரை தனியாக அழைத்து அவர்களது உடைமைகளை சோதனை செய்தனர். அப்போது அதில் சுமார் 1080 வலி நிவாரண மாத்திரைகள், இரண்டு பாக்கெட் கஞ்சா மற்றும் ஐந்து பாக்கெட் சிரஞ்சி உள்ளிட்டவை இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து 6 பேரையும் தலைமைச் செயலக காலனி காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்தியதில் சைதாப்பேட்டை பகுதியைச் சேர்ந்த திவாகர் (26), வியாசர்பாடி பகுதியை சேர்ந்த இளம்பருதி என்கின்ற ரியோ (28), சைதாப்பேட்டை பகுதியைச் சேர்ந்த சஞ்சய் (20), சுப்பிரமணி (21), ஓட்டேரி பகுதியைச் சேர்ந்த அன்னாள் என்கின்ற ரோஸ்லின் (24), வியாசர்பாடி பகுதியை சேர்ந்த ரம்யா என்கின்ற திரிஷா (25) என்பது தெரிய வந்தது. இவர்கள் கடந்த 16ம் தேதி சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து மும்பைக்குச் சென்று சத்திரபதி சிவாஜி ரயில் நிலையம் எதிரே உள்ள கேகேஆர் மெடிக்கல்ஸ் என்ற மருந்தகத்தில் 38 ஆயிரம் ரூபாய் பணம் கொடுத்து 1080 வலி நிவாரண மாத்திரைகளை வாங்கியுள்ளனர். அதனை திருப்பிக் கொண்டு வரும்போது போலீசாரிடம் சிக்கியது தெரிய வந்தது. அங்கு ஒரு மாத்திரையை 30 ரூபாய்க்கு வாங்கி அதனை சென்னையில் 200 ரூபாய் வரை வைத்து விற்பனை செய்து வந்ததும் தெரிய வந்தது. இதை தொடர்ந்து கைது செய்யப்பட்ட 6 பேரையும் சிறையில் அடைத்தனர்.

# வாட்ஸ்ஆப் பார்த்து மனைவிக்கு பிரசவம்.. குரூப்பில் மட்டும் 1024 பேராம்


சென்னை, நவ.22

சென்னையில் தனது மனைவிக்கு வீட்டிலேயே பிரசவம் பார்த்த கணவரிடம் சுகாதாரத் துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் வீட்டில் பிரசவம் பார்ப்பதற்கென்றே தனியாக வாட்ஸ் ஆப் குழு இருந்ததும், அதில் சுமார் 1024 உறுப்பினர்கள் இருப்பதும் சுகாதாரத்துறை அதிகாரிகள் நடத்திய விசாரணையில் தெரிய வந்துள்ளது.

கடந்த சில நாட்களாக இயற்கை விவசாயம், இயற்கை உணவு, உள்ளிட்ட இயற்கை சார்ந்த விஷயங்கள் சமூக வலைதளங்களில் அதிகமாக விவாதிக்கப்பட்டு வருகிறது. மேலும் சுகப் பிரசவம், வீட்டிலேயே பிரசவம் பார்ப்பது எப்படி என பல யூட்யூப் சேனல்களிலும் இணைய தளங்களிலும் செய்திகள் வெளியிடப்பட்டு வருகிறது.

இதனால் வீட்டிலேயே பிரசவம் பார்க்கிறேன் என சிலர் முயற்சித்து தாய் சேய் உயிரிழக்கும் சம்பவங்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் நடந்திருக்கிறது. இந்த நிலையில் அது போன்ற ஒரு வாட்ஸ் ஆப் குழுவை பார்த்து மனைவிக்கு வீட்டிலேயே பிரசவம் பார்த்து விபரீதத்தில் சிக்கி இருக்கிறார் கணவர் ஒருவர். திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த மனோகரன், சென்னை குன்றத்தூர் அருகே உள்ள நந்தம்பாக்கம் பகுதியில் தங்கி உள்ளார். அதே பகுதியில் பொக்லைன் இயந்திர ஓட்டுனராக பணியாற்றி வருவதாக கூறப்படுகிறது. இவருக்கு திருமணம் ஆகி சுகன்யா என்ற மனைவியும், கோபிகா, தாரணி என்ற இரு பெண் குழந்தைகள் உள்ளனர். இந்நிலையில் மூன்றாவது முறையாக சுகன்யா கர்ப்பம் தரித்திருக்கிறார். 10 மாதம் ஆன நிலையில் கடந்த 15ஆம் தேதி அவருக்கு பிரசவ வலி ஏற்பட்டுள்ளது.






இதனை தொடர்ந்து மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும் என சுகன்யா கூறி இருக்கிறார். ஆனால் இயற்கையான முறையில் வீட்டிலேயே பிரசவம் பார்க்கிறேன் எனக் கூறி மனோகரன் அவருக்கு வீட்டிலேயே பிரசவம் பார்த்துள்ளார். தொடர்ந்து அவருக்கு ஆண் குழந்தை பிறந்ததாக சொல்லப்படுகிறது. இந்த நிலையில் தான் வைத்துள்ள வாட்ஸ் ஆப் குரூப்பில் தன் வீட்டிலேயே மனைவிக்கு சுகப்பிரசவம் ஆனது குறித்து மனோகரன் வாட்ஸ் ஆப் குரூப்பில் பகிர்ந்திருக்கிறார்.

மேலும் மனைவியை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லாமல் தானே பிரசவம் பார்த்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். இந்த தகவல் அப்பகுதியில் பரவியது. இதனையடுத்து இது குறித்து வட்டார மருத்துவ அலுவலர் குன்றத்தூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்த போலீசார் மனோகரனை அழைத்துச் சென்று விசாரணை நடத்தினர். குறிப்பாக அவரது செல்போனை ஆராய்ந்த போது அதில் 'வீட்டில் குழந்தை பெற்றவர்களின் அனுபவம்' என தனியாக வாட்ஸ் ஆப் குழு அமைத்து அதில் மனோகரன் இருந்தது தெரியவந்தது.

அதிர்ச்சி தரும் விதமாக சுமார் 1024 உறுப்பினர்கள் அந்த வாட்ஸ் ஆப் குரூப்பில் இருந்துள்ளனர். மேலும் வீட்டிலேயே பிரசவம் பார்ப்பது எப்படி என ஏராளமான தகவல்களை பகிர்ந்ததும், அந்த தகவல்களை பார்த்து மனோகரன் தனது மனைவிக்கு பிரசவம் பார்த்ததும் தெரியவந்துள்ளது. தற்போது மனோகரின் மனைவியும் குழந்தையும் நலமாக இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்து இருக்கின்றனர். அதே நேரத்தில் ஏற்கனவே வீட்டில் பிரசவம் பார்த்து உயிர் இழப்பு சம்பவங்கள் நடைபெற்றிருக்கும் நிலையில் இது போன்ற விபரீதமான வேலைகளை யாரும் ஈடுபட வேண்டாம் என சுகாதாரத் துறை அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# நடுரோட்டில் வழக்கறிஞருக்கு அரிவாள் வெட்டு.. நீதிமன்ற வளாகத்தில் பதற்றம்

கிருஷ்ணகிரி, நவ.22

ஓசூர் குற்றவியல் நீதிமன்றம் அருகே கண்ணன் என்ற வழக்கறிஞர் அரிவாளால் சரமாரியாக வெட்டப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நீதிமன்ற வளாகத்தில் ஜூனியர் வழக்கறிஞர் கண்ணனை பயிற்சி வழக்கறிஞர் ஆனந்தன் அரிவாளால் சரமாரியாக வெட்டினார். இது தொடர்பான வீடியோ காட்சிகள் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியது. முன்விரோதம் காரணமாக இந்த சம்பவம் நடந்திருக்கலாம் என்று முதற்கட்ட தகவல் வெளியாகி யுள்ளது. வழக்கறிஞர் ஆபத்தான நிலையில் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.



வழக்கறிஞர் கண்ணன் நீதிமன்ற வளாகத்திலேயே அரிவாளால் வெட்டப்பட்டதை கண்டித்து நீதிமன்ற வழக்கறிஞர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

# கள்ளச்சாராய வழக்கில் மேல்முறையீடு செய்வது குறித்து ஆலோசித்து முடிவு அமைச்சர் ரகுபதி

புதுக்கோட்டை, நவ.22

புதுக்கோட்டையில் சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய வழக்கில் சி.பி.ஐ. விசாரணை எதிர்த்து மேல்முறையீடு செய்வது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், சட்ட வல்லுநர்களுடன் ஆலோசித்து முடிவெடுப்பார். சில கட்சிகள் சி.பி.ஐ. விசாரணை கோரியதை அரசியலாகத்தான் பார்க்க முடியும். கள்ளச்சாராய விவகாரத்தில் பாதிக்கப்பட்ட யாரும் சி.பி.ஐ. விசாரணை கேட்கவில்லை. 2026ல் சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. 200 இடங்களை பிடிப்பதற்காக இன்று முதல் பிரசாரத்தை தொடங்கி விட்டோம். முதலமைச்சரை பொருத்தமட்டில் மது விலக்கு வேண்டும் என்று கூறுகிறோம். அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் ஒரு நிகழ்ச்சியில் பேசுகையில் கூட்டணி கட்சிக்கு வருபவர்கள் சீட்டு களையும் கேட்கிறார்கள், பணத்தையும் கேட்கிறார்கள் என்று சொல்லி இருக்கிறார். ஆனால் அ.தி.மு.க.வுடன் யாரும் கூட்டணிக்கு வரவில்லை என்பதை இது காட்டுகிறது. இவ்வாறு அமைச்சர் ரகுபதி தெரிவித்தார்.

# விடியா திமுக ஆட்சியில் கொலை என்பது சர்வ சாதாரணம் என்ற அவல நிலை: ஆசிரியை கொலைக்கு இ.பி.எஸ். கண்டனம்

சென்னை, நவ.22

தஞ்சை மாவட்டம் மல்லிப்பட்டினம் அரசு மேல்நிலைப்பள்ளியில் ஆசிரியர் ரமணி கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளதாக வரும் செய்தி அதிர்ச்சியளிக்கிறது. அவரது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கல்.

விடியா திமுக ஆட்சியில் கொலை என்பது சர்வ சாதாரணம் என்ற அவல நிலை வரும் அளவிற்கு நிர்வாகத் திறனற்ற திமுக அரசு சட்டம் ஒழுங்கைக் காக்கத் தவறியுள்ளது.

அரசுப்பள்ளி ஆசிரியர்கள், அரசு மருத்துவர்கள் உள்ளிட்ட அரசு ஊழியர்களுக்கு, அவர்கள் பணிபுரியும் அரசுக்கு சொந்தமான இடங்களில் கூட பாதுகாப்பு துளியும் இல்லாத அளவிற்கு சட்டம் ஒழுங்கை சீர்குலைத்துள்ள விடியா திமுக அரசுக்கு எனது கடும் கண்டனம்.

ஆசிரியர் ரமணியின் கொலை வழக்கில் கைதாகியுள்ளவர் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுப்பதுடன், விடியா திமுக முதல்வர் வெறும் விளம்பரங்களில் மட்டுமே செலுத்தும் கவனத்தை, தன்னுடைய முதல் பணியான சட்டம் ஒழுங்கைக் காப்பதில் இனியாவது செலுத்த வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கண்டனத்தில் தெரிவித்துள்ளார்.

# கஸ்தூரிக்கு ஜாமின் வழங்கியது சென்னை எழும்பூர் நீதிமன்றம்

சென்னை, நவ.22

பிராமணர் சமூகத்தினர் சார்பில் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் நடிகை கஸ்தூரி பேசிய உரை, மக்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

அந்த நிகழ்ச்சியில் அவர் தெலுங்கு மக்கள் குறித்து அவதூறாக பேசியதாக அவர் மீது பலர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர். இதனால் தனது கருத்துக்கு கஸ்தூரி வருத்தம் தெரிவித்தார்.

எனினும், நடிகை கஸ்தூரிக்கு எதிராக சென்னை உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு இடங்களிலும் புகார் அளிக்கப்பட்டது. அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வந்தனர்.

இதைத்தொடர்ந்து அவர் முன்ஜாமின் கேட்டு மதுரை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்தார். அந்த மனுவை தள்ளுபடி செய்து நீதிமன்றம் உத்தரவிட்டது. கஸ்தூரியின் முன்ஜாமின் மனு தள்ளுபடி செய்யப்பட்டதை தொடர்ந்து அவர் தலைமறைவானார். இதையடுத்து ஐதராபாத் அருகே உள்ள பப்பலக்குடா பகுதியில் சினிமா தயாரிப்பாளர் ஹரிகிருஷ்ணனின் பங்களா வீட்டில் பதுங்கி இந்த கஸ்தூரியை தனிப்படை போலீசார் கைது செய்தனர்.

அதன்பிறகு எழும்பூர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நடிகை கஸ்தூரி புழல் சிறையில் அடைக்கப்பட்டார்.



இந்த நிலையில் நடிகை கஸ்தூரி ஜாமின் கோரி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து இருந்தார். அதில் ஆட்டிசம் குறைபாட்டால் பாதிக்கப்பட்ட குழந்தையின் தாய் என்பதை கருத்தில் கொண்டு ஜாமின் வழங்க வேண்டும் என்று மனுவில் கூறியிருந்தார். இதையடுத்து இந்த மனுவை விசாரிக்கும் காவல்துறை சார்பில் ஆட்சேபனை இல்லை என தெரிவித்ததால் கஸ்தூரிக்கு ஜாமின் வழங்கி சென்னை எழும்பூர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# ஆரம்ப சுகாதார நிலையங்களில் கேமராக்கள் பொருத்தி கண்காணிப்பதற்கு அரசு மருத்துவர்கள் எதிர்ப்பு

சென்னை, நவ.22

ஆரம்ப சுகாதார நிலையங்களில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தி மருத்துவர்களை கண்காணிப்பதற்கு அரசு மருத்துவர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.



இது தொடர்பாக இன்று தமிழ்நாடு மருத்துவ அலுவலர்கள் சங்கம் மாநில பொதுச்செயலாளர் மு.அகிலன் வெளியிட்ட அறிக்கையில், "தமிழகத்தில் போக்குவரத்து சிரமமாக இருக்கக் கூடிய குக்கிராமங்கள் உள்ளிட்ட மருத்துவ சேவை தேவைப்படுகிற கிராமப் புறங்களுக்கு மருத்துவர்கள், செவிலியர்கள் சென்று பணியாற்றுகின்றனர். அவர்களை கொச்சைப்படுத்தும் வகையில், கேமரா அமைத்து கண்காணிக்கப் போகிறோம் என்று பொது சுகாதாரத்துறை அறிவித்திருப்பது கண்டிக்கத்தக்கது.

சுகாதார நல அலுவலர்கள், மாவட்ட சுகாதார அலுவலர்கள், துணை இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், கூடுதல் இயக்குநர்கள் மற்றும் எல்லாவற்றிற்கும் முதன்மையாக துறை இயக்குநர் என பல அடுக்கு மேற்பார்வை நிலை உயர அலுவலர்கள் பணியில் இருக்கின்றனர். அவர்களை கொண்டு நேரடியாக கண்காணிக்காமல், கண்காணிப்பு கேமராக்கள் பொறுத்தி கண்காணிக்கப் போகிறோம் என்பது தவறானது. அரசு மருத்துவரை குத்தும் அளவுக்கு பதட்டமான சூழ்நிலையில் பாதுகாப்பு முறைகள் குறித்து ஆலோசிக்க வேண்டிய சூழலிலும், பாதுகாப்பு காரணங்களுக்காக கோரப்பட்ட கண்காணிப்பு கேமராவை, மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களை கண்காணிக்கப் பயன்படுத்துவது என்ன நியாயம். தற்போது நிலவும் ஆள் பற்றாக்குறைக்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. பொது சுகாதாரத்துறையை எதிர்த்து தீவிரப் போராட்டம் நடத்தத் தயாராக இருக்கிறோம்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, தமிழ்நாடு மருத்துவ அலுவலர்கள் சங்கத்தின் மாநில தலைவர் கார்த்தீஸ்வரன், மாநில பொதுச் செயலாளர் அகிலன், மாநில பொருளாளர் ரெங்கசாமி உள்ளிட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள், தேனாம்பேட்டையில் உள்ள பொது சுகாதாரத் துறை இயக்குநரகத்துக்கு சென்று தற்போதைய நெருக்கடி சூழலில் மருத்துவர்களின் பாதுகாப்பு குறித்த 20 கோரிக்கைகள் அடங்கிய மனுவை சமர்ப்பித்தனர்.

# உலக மீனவர் தினம்: சிந்தனை சிற்பி சிங்காரவேலன் சிலைக்கு மரியாதை

புதுச்சேரி, நவ.22

புதுச்சேரி மாநில மக்கள் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் உலக மீனவர் தினத்தை முன்னிட்டு, கடலூர் சாலை நீதிமன்றம் அருகே உள்ள சிந்தனை சிற்பி சிங்கார வேலன் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் கழகத்தின் தலைவர் மு.இராமதாஸ் தலைமையேற்றார். கழகச் சேர்மன் R. L. வெங்கட்டராமன் முன்னிலையில், மாநில துணை தலைவர், மாநில செயலாளர்கள் சிவகுமாரன், மோகனசுந்தரம், ரவிகுமார்,

துணை செயலாளர் கலியபெருமாள், தலைவர்கள் சந்திரன், விமலாபெரியாண்டி, முன்னாள் வார்டு உறுப்பினர் தஞ்செயன், கோமதி, ராஜேஷ், அருண், பீட்டர் உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் ஏராளமான கழக தொண்டர்கள் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வு, மீனவர் சமூகத்தின் மேம்பாட்டிற்கான விழிப்புணர்வையும், சிந்தனை சிற்பி சிங்காரவேலனின் வரலாற்று முக்கியத்துவத்தையும் நினைவுகூறும் விதமாக நடைபெற்றது.



# கடலில் காணாமல் போன மீனவர்களை கண்டுபிடிக்க வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்

கன்னியாகுமரி, நவ.22

கன்னியாகுமரி மாவட்டம் கடியபட்டணத்தைச் சேர்ந்த மீனவர்கள் சகாய செல்சோ மற்றும் ஆண்டனி ஜார்ஜ் வின்சென்ட் ஆகியோர் பகரின் நாட்டில் மீன்பிடித் தொழிலுக்குச் சென்று கடலில் காணாமல் போன நிலையில், அவர்களை கண்டுபிடிக்கவும், அவர்களது குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கவும் மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தி நாகர்கோவில் கலெக்டர் அலுவலகம் முன்பு தமிழ்நாடு மீன் தொழிலாளர் யூனியன் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.


இப்போராட்டத்துக்கு யூனியன் தலைவர் பீட்டர் தாஸ் தலைமையேற்றார். மாவட்ட நிர்வாகிகள் மங்களமேரி மற்றும் மெஷோ முன்னிலை வகித்தனர். கொரிக்கைகளை விளக்கி நெல்சன் பேசினார். மாநில செயலாளர் கருங்கல் அலெக்சாண்டர் போராட்டத்தின் காரணங்களை தெளிவுபடுத்தினார். கடலோர மக்கள் சங்க தலைவர் ஜாண் போஸ்கோ,




அருட்பணியாளர்கள் ஆன்ட்ரூஸ், பபியான், சமூக சேவகர் குளச்சல் முகம்மது சபீர், மற்றும் முன்னாள் தலைவர் லிஜின், டொமினிக், ஜாண்ரோஸ் ஆகியோர் கலந்து கொண்டு போராட்டத்திற்குத் துணை நின்றனர்.

மாயமான மீனவர்களின் குடும்பத்தினர், மனைவியர், மீனவ அமைப்பினர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்களும் போராட்டத்தில் பங்கேற்றனர். இந்நிகழ்வு, காணாமல் போன மீனவர்களை மீட்பதற்கான நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொள்ள ஆவன செய்தது.

# தொடர் மழையால் குற்றாலம் அருவிகளில் வெள்ளப்பெருக்கு



தென்காசி, நவ.22

தென்காசி மாவட்டம் முழுவதும் இரவு முதல் தொடர்ந்து மழை பெய்து வருவதால் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் இன்று விடுமுறை அளித்து மாவட்ட கலெக்டர் கமல் கிஷோர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

மேலும் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளிலும் பெய்து வரும் மழையின் காரணமாக குற்றால அருவிகளான மெயின் அருவி, ஐந்தருவி ,பழைய குற்றால அருவிகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு கருதி அங்கு குளிப்பதற்கு போலீசார் தடைவித்துள்ளனர்.

தென்காசி மாவட்டம் முழுவதும் பரவலாக பெய்து வரும் மழையால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு உள்ளது.

# கூடலூர் அருகே அரசு பள்ளிக்குள் நுழைந்த ஒற்றை காட்டு யானை



ஊட்டி, நவ.22

நீலகிரி மாவட்டம் கூடலூர் அருகே நெலாக்கோட்டையில் அரசு பள்ளி செயல்பட்டு வருகிறது. இந்த பள்ளியில் சுற்று வட்டார கிராமங்களை சேர்ந்த மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர்.

இந்த பள்ளியில் படித்து வரும் மாணவர்கள் பள்ளி முடிந்ததும் மாலையில் பள்ளி மைதானத்தில் கால் பந்து விளையாடுவது வழக்கம்.

பள்ளி முடிந்ததும் மாணவர்கள் வழக்கம் போல பள்ளியில் உள்ள மைதானத்தில் கால்பந்து விளையாடினர். மாணவர்கள் அனைவரும் உற்சாகமாக விளையாடி கொண்டிருந்தனர்.

பள்ளியினையொட்டி வனப்பகுதி உள்ளது. இந்த நிலையில் மாணவர்கள் விளையாடி கொண்டிருந்த நேரத்தில் வனத்தை விட்டு வெளியே வந்த ஒற்றை யானை ஒன்று பள்ளி மைதானத்திற்குள் நுழைந்தது.

யானை வேகமாக வருவதை பார்த்ததும், விளையாடி கொண்டிருந்த மாணவர்கள் அங்கிருந்து அலறியடித்தபடி ஓட்டம் பிடித்தனர். பின்னர் வகுப்பறைகளில் சென்று பாதுகாப்பாக இருந்து கொண்டனர்.

சிறிது நேரம் யானை மைதானத்திலேயே வலம் வந்தது. அதன்பின்னர் யானை அங்கிருந்து வெளியேறி வனத்திற்குள் சென்றது. யானை சென்ற பின்னரே மாணவர்கள் நிம்மதி அடைந்தனர்.

காட்டு யானை மைதானத்திற்குள் நுழைந்ததை அங்கிருந்த சிலர் வீடியோ எடுத்து, அதனை சமூக வலைதளத்தில் பகிர்ந்தனர்.

இந்த காட்சிகள் இணையத்தில் வைரலாகி வருகிறது.

# காரைக்குடி 100 சவரன் நகைகள் கொள்ளை போலீசார் விசாரணை

சிவகங்கை, நவ.22

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே உள்ள கருவியபட்டியில் 100 சவரன் நகைகள்,

வெள்ளி பொருட்கள் மற்றும் பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

முத்துமாரியம்மன் கோவில் நிர்வாக தலைவர் சேதுராமன் வீட்டில் யாரும் இல்லாததை அறிந்த மர்மநபர்கள் நள்ளிரவில் வீட்டின் பூட்டை உடைத்து கொள்ளையடித்துள்ளனர். சேதுராமன் வீட்டில் வைக்கப்பட்டு இருந்த கோவில் நகைகளும் திருடப்பட்டுள்ளதால் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

மேலும் சேதுராமன் வீட்டருகே இருந்த மணிகண்டன் வீட்டிலும் பூட்டை உடைத்து மர்மநபர்கள் கைவரிசை காட்டியுள்ளனர்.

அடுத்தடுத்து நடைபெற்ற உள்ள கொள்ளை சம்பவம் குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கட்சியில் உழைப்பவர்களுக்கு மிக விரைவில் பதவிகள் புஸ்ஸி ஆனந்த்



சென்னை, நவ.22

நடிகர் விஜய்யின் தமிழக வெற்றி கழகம் 2026 சட்டமன்ற தேர்தலில் களம் இறங்குகிறது. கூட்டணி அமைத்து தேர்தலை சந்திப்பதற்கு விஜய் திட்டமிட்டுள்ளார். மேலும் கட்சி வளர்ச்சி பணியிலும் தீவிரம் காட்டி வருகிறார். அந்த வகையில் அவரது அறிவுறுத்தலின் பேரில் சென்னை பனையூரில் உள்ள தமிழக வெற்றி கழகத்தின் தலைமை அலுவலகத்தில், செங்கல்பட்டு மாவட்ட நிர்வாகிகள், உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்துக்கு தமிழக வெற்றி கழகத்தின் பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த் தலைமை தாங்கி பேசியதாவது:

மற்ற கட்சிகளில் கூட்டம் என்றால் 200, 300 பேர் இருப்பார்கள். நமது கட்சியில்தான் 2 ஆயிரம், 3 ஆயிரம் கூடி இருக்கிறார்கள். நான் இந்த கூட்டம் தொடங்குவதற்கு முன்பாக கட்சி அறையில் இருந்தேன். அப்போது எவ்வளவு பேர் வந்திருக்கிறார்கள்? என்று கேட்டேன். 30, 40 பேர் மட்டும் வந்து அமர்ந்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இன்னும் அரை மணி நேரத்தில் பாருங்கள் என்று சொன்னேன். அதை போன்று கூட்டம் திரண்டுள்ளது. இதுதான் தளபதி (விஜய்) மீது வைத்திருக்கிற பாசம், அன்பு.

தளபதியின் அறிவுறுத்தலின்படி கட்சியில் உழைப்பவர்களுக்கு மிக விரைவில் பதவிகள் வழங்கப்படும். யாரெல்லாம் கட்சிக்கு உழைத்தார்களோ அவர்களுக்கு தேடி போய் பதவி கொடுப்பது தான் தமிழக வெற்றி கழகம். கீழ் மட்டத்தில் இருந்து மேல் மட்டம் வரையில் பதவிகள் வழங்கப்பட இருக்கிறது. நம் தலைவரை முதலமைச்சர் இருக்கையில் அமர வைப்பதற்கு நாம் அனைவரும் கடுமையாக உழைக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

# சிதறால் மலை கோயிலில் தமிழ் பலகைகள் உடைப்பு



அருமனை, நவ.22

அருமனையை அடுத்த சிதறால் மலை கோயில் மிகவும் பழமை வாய்ந்தது. தினசரி 200க்கும் மேற்பட்டோர் இங்கு வந்து செல்கின்றனர். சமணர் மற்றும் பகவதி அம்மன் ஆகிய 2 கடவுள்களை கொண்ட முக்கிய கோயில் மற்றும் வரலாற்று சிறப்புமிக்க இடமாகும். கிபி 1 முதல் 10 வரை சமணர்கள் இந்த பகுதியை ஆண்டதாக வரலாறு கூறுகிறது.

1958ம் ஆண்டு இந்த பகுதி பாதுகாக்கப்பட்ட தொல்பொருள் நினைவு சின்னமாக அறிவிக்கப்பட்டது. 2010ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட திருத்தத்தின்படி இந்த நினைவு சின்னங்களை உருமாற்றங்கள் செய்யவோ, தவறான காரியங்களுக்கு பயன்படுத்தவோ கூடாது என் தெரிவிக்கப்பட்டது. அப்படி செய்தால் அச்செயலில் ஈடுபடும் நபருக்கு 2 ஆண்டுகள் சிறை தண்டனை அல்லது ₹1 லட்சம் அபராதம் அல்லது 2ம் சேர்த்து தண்டனையாக வழங்கப்படும். மேலும் சுமார் 200 மீட்டர் முறைப்படுத்தப்பட்ட பகுதி வரை கட்டுமான பணிகளை செய்ய வேண்டும் என்றால் முன் அனுமதி பெற்றிருக்க வேண்டும்.

இங்கு ஆங்கிலம், இந்தி, மலையாளம் மற்றும் தமிழ் மொழிகளில் வரலாறு மற்றும் விதிக்குறிப்புகள் வைக்கப்பட்டுஉள்ளன. ஆனால் சிலர் மலையின் உச்சி மற்றும் நடைபாதை பகுதியில் முக்கியமான இடங்களில் தமிழ் பலகைகளை மட்டும் குறிவைத்து உடைத்து உள்ளனர். பல பலகைகள் காணாமல் போய் விடுகின்றன. மேலும் அறிவிப்பு பலகை தூண்களும் சேதப்படுத்தப்பட்டுள்ளன. இது இயற்கை ஆர்வலர்களை வேதனை படுத்தி உள்ளது. எனவே அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். சிதறால் மலை கோயிலை பாதுகாக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

# தஞ்சை தமிழ் பல்கலை. துணைவேந்தர் சஸ்பெண்ட்




சென்னை, நவ.22

தஞ்சை தமிழ் பல்கலைக்கழக துணைவேந்தர் திருவள்ளுவன் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். தஞ்சை தமிழ் பல்கலைக்கழக துணை வேந்தர்திருவள்ளுவனை, பணியிடை நீக்கம் செய்து ஆளுநர் ஆர்.என்.ரவி உத்தரவிட்டுள்ளார். டிச.12ம் தேதியுடன் ஓய்வு பெற உள்ள நிலையில் தஞ்சை தமிழ் பல்கலைக்கழக துணைவேந்தர் திருவள்ளுவன் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளார். அதிமுக ஆட்சிக் காலத்தில் தஞ்சை தமிழ் பல்கலை.யில் முறைகேடாக பணியாளர்கள் நியமிக்கப்பட்டதாக புகார் எழுந்தது. புகார் தொடர்பான விசாரணையை முறையாக மேற்கொள்ளாத விவகாரத்தில் நடவடிக்கை என தகவல் வெளியாகியுள்ளது.

# கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய வழக்கில் காவல்துறை தலையிடக்கூடாது என நீதிமன்றம் உத்தரவு: வழக்கறிஞர் பாலு




சென்னை, நவ.22

கள்ளக்குறிச்சியில் கடந்த ஜூன் மாதம் 18ஆம் தேதி அன்று மெத்தனால் கலந்த கள்ளச்சாராயம் குடித்ததால் உடல்நலம் பாதிக்கப்பட்டு 193 பேர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர். இதில் 68 பேர் உயிரிழந்தனர். கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய மரண வழக்கை சிபிசிஐடி போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய வழக்கின் விசாரணையை சிபிஐக்கு மாற்றக்கோரி அதிமுக, பாஜக, பாமக ஆகிய கட்சிகள் தரப்பில் சென்னை ஐகோர்ட்டில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுக்களைவிசாரித்த நீதிபதிகள் டி.கிருஷ்ணகுமார், பி.பி. பாலாஜி அமர்வு வழக்கு விசாரணையை சிபிஐக்கு மாற்றம் செய்து உத்தரவிட்டனர். மேலும் காவல் துறை அதிகாரிகள் மீது எடுத்த நடவடிக்கையை திரும்ப பெற்றது தவறு என்று நீதிபதிகள் கூறினர்.

மேலும் நீதிபதிகள் அளித்த உத்தரவு தொடர்பாக பாமக வழக்கறிஞர் பாலு கூறுகையில், கள்ளச்சாராய மரணம் தொடர்பாக அனைத்து விவரங்களையும் விசாரிக்க நீதிபதிகள் ஆணை பிறப்பித்துள்ளனர். தமிழக காவல்துறையின் தலையீடு இருக்கக்கூடாது. கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய வழக்கின் அனைத்து ஆவணங்களையும் உடனடியாக சிபிஐ வசம் ஒப்படைக்கவும் இவ்வழக்கில் தமிழக காவல்துறையினர் எவரும் தலையிடக்கூடாது என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக கூறினார். மேலும் வழக்கு சிபிஐக்கு மாற்றப்பட்டதால் கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய மரணங்களை மூடிமறைக்க முயன்ற தமிழக அரசின் செயல் முறியடிக்கப்பட்டுள்ளது என்றார்.

# பாகன் நினைவில் 3வது நாளாக சாப்பிடாத தெய்வானை



திருச்செந்தூர், நவ.22

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் தெய்வானை யானையை பராமரிக்க 3 பாகன்கள் பணியாற்றி வருகின்றனர். நேற்று முன்தினம் மாலை பாகன் உதயகுமார் என்பவர் இருந்தார்.

அப்போது அவரது உறவினரான சிசுபாலன் என்பவர் யானை முன்பு வெகு நேரம் செல்பி எடுத்ததால் தெய்வானை யானை ஆத்திரமடைந்து சிசுபாலனை தாக்கியது.

அப்போது பின்னால் இருந்து சிசுபாலனை காப்பாற்ற ஓடி வந்த உதயகுமாரை பாகன் என்று தெரியாமல் துதிக்கையால் தள்ளியது. இதில் 2 பேரும் உயிரிழந்தனர். பின்னர் உயிரிழந்தது பாகன் என்று தெரிந்ததும் யானை அவரை துதிக்கையால் தட்டி எழுப்பி உள்ளது.

உதயகுமார் இறந்து விட்டார் என்று தெரிந்ததும் யானை மண்டியிட்டு அவரையே பார்த்துக் கொண்டே இருந்துள்ளது. மேலும் போலீசார் உதயகுமாரின் உடலை பிரேத பரிசோதனைக்காக எடுக்க முற்பட்ட போதும் எடுக்க விடாமல் தடுத்துள்ளது.

அப்போது மற்ற பாகன்கள் ராதாகிருஷ்ணன், செந்தில் குமார் இருவரும் வந்து யானையிடம் அதற்குரிய பாஷையில் பேசி சமாதானப்படுத்திய பிறகே உடலை எடுத்துள்ளனர்.

இதற்கிடையே சம்பவம் நடந்த நேற்று முன்தினம் மாலை 3 மணியில் இருந்து இரவு 8 மணிவரை பாகன் உதயகுமார் நினைவிலே இருந்த யானை உணவு எதுவும் சாப்பிடாமல் இருந்துள்ளது. மற்ற பாகன் இருவரும் சமாதானம் செய்த பின்பு வழக்கமாக கொடுக்கும் மெனுவில் உள்ள உணவு கொடுத்த போது சிறிதளவே சாப்பிட்டுள்ளது.

சம்பவம் நடந்து இன்று 3வது நாள் வரை சரிவர அதாவது இயல்பான உணவை உட்கொள்ளாமல் பாகன் உதயகுமார் நினைவிலேயே இருந்து வருகிறது. மேலும் பாகன் இறந்த கிடந்த இடத்தையே உற்று பார்த்தவாறு பாகன் நினைவிலே உள்ளது.

தற்போது யானையை பக்தர்கள் யாரும் பார்க்கவோ, புகைப்படம் எடுக்கவோ அனுமதிக்கவில்லை. தொடர்ந்து மாவட்ட வன அலுவலர் ரேவதிரமன் மற்றும் கால்நடை மருத்துவ அலுவலர்கள்யானையைதொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

5 நாட்களுக்கு பின்னர் தான் யானையை வழக்கமான பணிக்கு பயன்படுத்தலாமா? அல்லது முகாமிற்கு அனுப்பலாமா? என முடிவு செய்யப்படும் என கூறப்படுகிறது.

இந்த நிலையில் இறந்து போன உதயகுமார் உடலுக்கு கோவில் தக்கார் அருள்முருகன் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

பின்னர் அவர் சம்பவம் நடந்த இடம் மற்றும் யானை கட்டப்பட்டுள்ள இடத்தை பார்வையிட்டு சம்பவம் குறித்து கேட்டறிந்தார்.

# கனமழை எச்சரிக்கை: நாகை மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை



நாகப்பட்டினம், நவ.22

வங்கடலில் வருகிற 26, 27 மற்றும் 28 ஆகிய தேதிகளில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாக வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனால் நாகப்பட்டினம் மாவட்டத்தில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள விசைப்படகுகள் மற்றும் பைபர் படகுகள் மறு அறிவிப்பு வரும் வரை மீன் பிடிக்க ஆழ்கடல் செல்ல வேண்டாம் என மீன்வளத்துறை உதவி இயக்குனர் ஜெயராஜ் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

விசைப்படகு மீனவர்களுக்குவினியோகம் செய்யப்படும் டோக்கன்கள் நிறுத்தப்பட்டு ள்ளது. இது தொடர்பான சுற்றறிக்கை நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள அனைத்து மீனவ கிராமங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஆழ்கடல் சென்ற அனைத்து படகுகளும் வருகிற 23ம் தேதிக்குள் கரை திரும்ப வேண்டும். கனமழையின் காரணமாக கடல் அலையின் சீற்றம் அதிமாக இருக்கும்.

பலத்த இடி மின்னல் ஏற்படவும் வாய்ப்புள்ளது என தெரிவித்துள்ளனர். மீன்வளத்துறை எச்சரிக்கையை தொடர்ந்து மீனவர்கள் கரை திரும்பி வருகின்றனர்.

இந்நிலையில் நாகூர் பட்டினச்சேரி துவங்கி கீச்சாங்குப்பம், அக்கரைப்பேட்டை, செருதூர், ஆறுகாட்டுத்துறை, புஷ்பவனம் வேதாரண்யம் கோடியக்கரை உள்ளிட்ட சுமார் 27 மீனவ கிராமங்களை சேர்ந்த மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்க செல்லவில்லை.

இதனால் 3500 க்கும் மேற்பட்ட பைபர் படகுகள் மற்றும் 700க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் அந்தந்த மீனவ கிராமத்தின் கரையோரம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

மீனவர்கள் கடலுக்கு செல்லாததால் மீன் விற்பனை செய்யும் மீன்பிடித்தளம் மற்றும் அக்கரைப்பேட்டை மீன்பிடி துறை முகம் ஆகிய வெறிச்சோடி காணப்படுகிறது.

# வைகை அணையில் தண்ணீர் திறப்பு: கரையோர மக்களுக்கு எச்சரிக்கை

ஆண்டிபட்டி, நவ.22

தேனி மாவட்டம் ஆண்டிபட்டிஅருகேஉள்ளவைகை அணையில் இருந்து பூர்வீக பாசன பகுதிகளான ராமநாதபுரம், சிவகங்கை, மதுரை மாவட்டங்களின் தேவைக்காக தண்ணீர் திறக்க விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். அதன்பேரில் ராமநாதபுரம், சிவகங்கை, மதுரை மாவட்டங்களுக்கு வைகை அணையில் இருந்து 3 கட்டங்களாக தண்ணீர் திறக்க அரசு உத்தரவிட்டது. அதன்படி முதல் கட்டமாக கடந்த 10ந் தேதி ராமநாதபுரம் பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டது.

கடந்த 9 நாட்களில் 1830 மி.கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. இந்த நிலையில் மதுரை மாவட்ட பாசனத்திற்காக இன்று காலை முதல் தண்ணீர் திறக்கப்பட்டது.

குடிநீருக்காக மட்டும் 69 கன அடி தண்ணீர் திறக்கப்பட்ட நிலையில் இன்று காலை முதல் 569 கன அடியாக வெளியேற்றப்படுகிறது. 71 அடி உயரம் உள்ள அணையின் நீர் மட்டம் இன்று காலை நிலவரப்படி 57.97 அடியாக உள்ளது. வரத்து 1171 கன அடியாகவும், இருப்பு 3223 மி.கன அடியாகவும் உள்ளது.

இன்று முதல் 10 நாட்களுக்கு இந்த தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதனால் தேனி, மதுரை மாவட்டத்தில் வைகை கரையோரம் உள்ள மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டு ள்ளது. ஆற்றில் இறங்கவோ, கால்நடைகளை குளிப்பாட்டவோ வேண்டாம் என அதிகாரிகள் அறிவுறுத்தி உள்ளனர். 3ம் கட்டமாக சிவகங்கை மாவட்டத்திற்கு தண்ணீர் திறக்கப்படும்.

முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் 122.40 அடியாக உள்ளது. வரத்து 463 கன அடி. திறப்பு 1033 கன அடி. இருப்பு 3103 மி.கன அடியாக உள்ளது.

மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் 54.30 அடி. வரத்து மற்றும் திறப்பு 100 கன அடி. இருப்பு 421.14 மி.கன அடி. சோத்துப்பாறை அணையின் நீர்மட்டம் முழு கொள்ளளவை எட்டி 126.28 அடியில் நீடிக்கிறது. இதனால் அணைக்கு வரும் 34.29 கன அடி நீர் முழுவதும் வெளியேற்றப்படுகிறது. நீர் இருப்பு 100 மி.கன அடியாக உள்ளது.

## இயற்கை எய்தினார்



தோற்றம் 28-05-1947

மறைவு 20-11-2024

திரு S.K.சுப்பிரமணியம் TNSTC அவர்கள்

நடத்துனர் ஓய்வு,

20-11-2024 புதன்கிழமை இரவு 8.30 மணிளயவில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

# குமரியில் 2 நாட்களுக்கு பாதுகாப்பு ஒத்திகை; 42 மீனவ கிராமங்கள் கண்காணிப்பு: அதிநவீன படகுகளில் போலீசார் ரோந்து



கன்னியாகுமரி, நவ.22

கன்னியாகுமரி கடற்கரைபகுதியையொட்டிய 42 மீனவ கிராமங்களையொட்டி கடலோர பாதுகாப்பு குழும போலீசார் பாதுகாப்பு ஒத்திகையை தொடங்கி உள்ளனர். இன்றும், நாளையும் அதிநவீன படகுகளில் ரோந்து பணியில் ஈடுபட உள்ளனர்.

தமிழகம் முழுவதும் கடலோர பகுதிகளில் தீவிரவாதிகள் நுழைவதை தடுக்கும் வகையில் கடலோர பாதுகாப்பு குழும போலீசார் ஆண்டுதோறும் பாதுகாப்பு ஒத்திகையில் ஈடுபட்டு வருகின்றனர். அந்த வகையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஆரோக்கியபுரம் முதல் நீரோடி வரையிலான 42 மீனவ கிராமங்களை ஒட்டிய கடற்பகுதியில் போலீசார் பாதுகாப்பு ஒத்திகையை இன்று காலை தொடங்கி உள்ளனர். கன்னியாகுமரி கடலோர பாதுகாப்பு குழும இன்ஸ்பெக்டர் நவீன் தலைமையில் இந்திய கப்பல் படை, கடலோர காவல் படை, தமிழ்நாடு கடலோர பாதுகாப்பு குழும போலீசார், தமிழ்நாடு காவல்துறை, சுங்கத்துறை போலீசார் ஆகியோர் இணைந்து இந்த பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். கடலோர காவல் படையினரில் சிலர் தீவிரவாதிகள் போல் வேடமணிந்து கடல் பகுதியில் அத்துமீறி நுழைவது போலவும், அவர்களை சக போலீசார் கண்டுபிடித்து முறியடிப்பது போன்றும் பாதுகாப்பு பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதேபோல் அதிநவீன படகுகள் மூலம் கடலோர பாதுகாப்பு குழும போலீசார் ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர். அப்போது கடல் பகுதியில் மீன்பிடித்துக்கொண்டிருக்கும் மீனவர்களிடம் அடையாளம் தெரியாத படகில் யாராவது வந்தால் உடனடியாக தகவல் தரவேண்டும். அசம்பாவித சம்பவங்கள் நடைபெற இருந்தால் முன் கூட்டியே எச்சரிக்கையாக எப்படி செயல்பட வேண்டும் என்பது குறித்தும் எடுத்து கூறினர். இந்த ஒத்திகை நாளை நிறைவடைகிறது.

# டாடா எலக்ட்ரானிக்ஸ் ஆலை விரிவாக்கத்துக்கு அனுமதி வழங்கியது தமிழ்நாடு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம்




சென்னை, நவ.22

ஒசூர் டாடா எலக்ட்ரானிக்ஸ் மொபைல் போன் உற்பத்தி ஆலை விரிவாக்கத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி தமிழ்நாடு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் வழங்கியதுஒசூரில் ரூ.3,051 கோடி முதலீட்டில்டாடா எலக்ட்ரானிக்ஸ் ஆலை ஏற்கனவே செயல்பட்டு வருகிறது. டாடா எலக்ட்ரானிக்ஸ் ரூ.3,699 கோடி முதலீட்டில் ஆலையை விரிவாக்கம் செய்ய முடிவு செய்துள்ளது. தற்போது 1.49 லட்சம் ச.மீ.,

பரப்பளவில் செயல்பட்டு வரும் ஆலை 5 லட்சம் ச.மீ. பரப்பளவில் விரிவாக்கம் செய்ய உள்ளது

# சிங்கம்புணரியில் தயாராகுது... சிதம்பரம் கோயில் தேருக்கு மெகா வடக்கயிறு: பின்னும் பணியில் தொழிலாளர்கள் தீவிரம்



சிங்கம்புணரி, நவ.22

சிதம்பரம் நடராஜர் கோயிலில் உள்ள 5 தேர்களுக்கு மெகா வடக்கயிறு தயாரிக்கும் பணி சிங்கம்புணரியில் தீவிரமாக நடந்து வருகிறது. இதில், 40க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். சிவகங்கைமாவட்டம், சிங்கம்புணரியில் நூ ற ா ண் டு க் கு ம் மேலாக தென்னைநார் கயிறு தயாரிக்கும் பணி நடந்து வருகிறது. இங்கு கொச்சக்கயிறு, எருது கட்டும் கயிறு, சாரக் கயிறு, தேர்வடக்கயிறு என பல வகையான கயிறுகள் தயாரிக்கப்படுகின்றன.

6 அடி முதல் 200 அடி நீளம் வரை, பல்வேறு வகை கயிறுகள் தயாரிக்கப்பட்டு வெளியூர்களுக்கும், வெளிமாநிலங்களுக்கும் அனுப்பப்பட்டு வ ரு கின் ற ன . சிங்கம்புணரி, காளாப்பூர், வேங்கைப்பட்டி, பிரான்மலை உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் கயிறு தயாரிக்கும் தொழில்குடிசைத்தொழிலாளாக நடந்து வருகிறது. பெரும்பாலும் இத்தொழிலில் பெண்களே ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், தமிழகத்தின் புகழ் பெற்ற கோயில் தேர்களுக்கு வடக்கயிறு தயாரிக்க ஆர்டர்கள் வரத் தொடங்கியுள்ளன.

இதன்படி சிதம்பரம் நடராஜர் கோயிலில் உள்ள 5 தேர்களுக்கு மெகா வடக்கயிறு தயாரிப்பதற்காக ஆர்டர் கிடைத்துள்ளது. இதையடுத்து ஊரில் உள்ள சேவுகப் பெருமாள் கோயில் பகுதியில் 40க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தேர்வடக் கயிறுகளை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது குறித்து கயிறு தயா ரி ப் ப ா ள ர் க ள் கூறுகையில், ‘200 அடி நீளத்தில் 18 இன்ச் சுற்றளவு கொண்ட 10 தேர் வடக்கயிறு தயாரிக்கும் பணி, 40 தொழிலாளர்கள் மூலம் கடந்த இரண்டு மாதங்களாக நடைபெற்று வருகிறது. சிதம்பரம் மற்றும் ஆந்திர மாநிலத்தில் உள்ள கோயில்களுக்கு 10 தேர்வடக்கயிறுகள் தயாரிக்க ஆர்டர்பெறப்பட்டுள்ளது. இதற்காக 30 டன் தேங்காய் நார்களை கொண்டு தேர்வடக்கயிறு தயாரிக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

பெரும்பாலான தேர்களின் சக்கரங்கள் இரும்பு சக்கரங்களாக மாற்றப்பட்டுள்ளதால், சங்கிலி செயின்களை கொண்டு தேர் இழுக்கும் பொழுது தேரின் வேகம் அதிகமாக இருந்தால், அதனைக் கட்டுப்படுத்த முடியாத நிலை உருவாகும். இதனால், தேர்வடக்கயிறுகளை தற்போது அதிக அளவில் பயன்படுத்த தொடங்கியுள்ளனர். இதனால், தேர்வடக் கயிறுகளுக்கு தேவை அதிகரித்துள்ளது’ என்றனர்.

# தேனி நகர சாலைகளில் சுற்றித்திரியும் மாடுகளால் வாகன ஓட்டிகள் அவதி



தேனி, நவ.22

தேனி நகரின் நெடுஞ்சாலைகளில் சுற்றித் திரியும் மாடுகளால் வாகன ஓட்டிகள், நடந்து செல்வோர் அவதிக்குள்ளாகி வருகின்றனர். தேனி நகரில் பெரியகுளம் சாலை, மதுரை சாலை மற்றும் கம்பம் சாலைகள் முக்கிய சாலைகளாக உள்ளன. இந்தச் சாலைகளில் எப்போதும் போக்குவரத்து அதிகமாகக் காணப்படும். இதில் மதுரை மற்றும் கம்பம் சாலைகள் தேசிய நெடுஞ்சாலைத்துறை மூலமாகவும், தேனி நகர் பெரியகுளம் சாலையானது மாநில நெடுஞ்சாலைத்துறை மூலமாகவும் பராமரிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தேனி நகர் பெரியகுளம் சாலையில் அல்லிநகரம் முதல் அன்னஞ்சி பிரிவு வரை சமீபகாலமாக இப்பகுதியை சேர்ந்த சிலர் தங்களது வளர்ப்பு மாடுகளை தங்களுக்கான மாட்டு கொட்டகையில் கட்டி வைப்பதில்லை. மேலும், மேய்ச்சலுக்கு கொண்டு செல்வதில்லை. இந்த மாடுகளை சாலைகளில் திரிய விடுகின்றனர். இதனால் மாடுகள் கூட்டம், கூட்டமாக அல்லிநகரம் முதல் அன்னஞ்சி வரையிலான மாநில நெடுஞ்சாலையினை அடைத்தபடி சாலையோரம் கிடக்கும் கழிவுகளை உண்டு திரிகின்றன.

இதில் சாலைகளில் கூட்டம், கூட்டமாக திரியும் மாடுகள், திடீரென சண்டையிட்டு அங்கும், இங்குமாக ஓடுவது வாடிக்கையாக இருந்து வருகிறது. மேலும் சில நேரங்களில் மாடுகள் சாலைகளில் படுத்துக்கொள்கின்றன. இதனால் வாகன ஓட்டிகள் சிரமத்துடன் கடந்து செல்ல வேண்டியது. மேலும் மாடுகள் மிரண்டு அங்குமிங்கும் ஓடும் போது வாகன ஓட்டிகள் தடுமாறி விழுந்து விபத்திற்கு உள்ளாகின்றனர்.

அத்துடன் சாலைகளில் செல்லும் சிறுவர்கள், முதியவர்கள், பெண்கள் தயக்கத்துடன் செல்கின்றனர். எனவே நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகளும், நகராட்சி அதிகாரிகளும், போலீசாரும் உரிய நடவடிக்கை எடுத்து, மாடு வளர்ப்போருக்கு உரிய எச்சரிக்கைகளை வழங்கி தீர்வு காணவேண்டும் எனபொது மக்கள், வாகன ஓட்டிகள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

## சூர்யா 45 படத்தில் நடிக்கும் திரிஷா



தென்னிந்திய திரையுலகில் முன்னணி நடிகராக இருப்பவர் சூர்யா. இவரது நடிப்பில் சிறுத்தை சிவா இயக்கத்தில் கடந்த 14ந் தேதி 'கங்குவா' படம் வெளியானது. இந்த படத்தில் பாபி தியோல், திஷா பதானி, யோகி பாபு ஆகியோர் நடித்துள்ளனர். இப்படம் கலவையான விமர்சனங்களை பெற்று வருகிறது. அதனை தொடர்ந்து கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் சூர்யா 44 திரைப்படத்தில் நடித்து முடித்துள்ளார்.

அடுத்ததாக சூர்யாவின் 45வது படத்தை ஆர். ஜே. பாலாஜி இயக்கவுள்ளதாகவும் ஏ. ஆர். ரகுமான் இசையமைக்கவுள்ளதாகவும் அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகியுள்ளது. இந்த படத்தினை ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ்நிறுவனம்தயாரிக்கிறது. படத்தின்அறிவிப்பு போஸ்டரைபார்க்கும்போது இந்தபடம்கிராமத்துக்கதைக்களத்தில் உருவாகும்என்றுஎதிர்பார்க்கப்படுகிறது. தற்காலிகமாகஇப்படத்திற்கு'சூர்யா45'என்றுதலைப்புவைக்கப்பட்டிருக்கிறது.

இந்த படத்தின் கதையை முதலில் ஆர்.ஜே.பாலாஜி நடிகை திரிஷாவுக்காக 'மாசாணி அம்மன்' என்ற தலைப்பில் எழுதியதாக தகவல் வெளியானது. பின்னர், இப்படத்தின் கதையை சூர்யாவுக்கு ஏற்றவாறு படக்குழு மாற்றம் செய்ததாகவும் கூறப்படுகிறது. இந்த நிலையில் சமீபத்தில் நிகழ்ச்சி ஒன்றில் சூர்யா 45 படத்தில் நடிகை திரிஷா கதாநாயகியாக நடிப்பதாக ஆர்.ஜே.பாலாஜி கூறியுள்ளார். ஏற்கனவே சூர்யா மற்றும் திரிஷா இணைந்து மவுனம் பேசியதே, ஆறு போன்ற படங்களில் நடித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சூது கவ்வும் 2 படத்தின் ரிலீஸ் தேதி அறிவிப்பு




கடந்த 2013ம் ஆண்டு நலன் குமாரசாமி இயக்கத்தில் நடிகர் விஜய் சேதுபதி நடிப்பில் வெளியான திரைப்படம் 'சூது கவ்வும்'. இந்த படத்தில் சஞ்சிதா ஷெட்டி, அசோக் செல்வன், பாபி சிம்ஹா, ரமேஷ் திலக், கருணாகரன் என பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருந்தனர். டார்க் காமெடி பாணியில் உருவான இந்த படம் விமர்சன ரீதியாகவும் வசூல் ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்றது.

இந்த படத்தின் வெற்றியைத் தொடர்ந்து சூது கவ்வும் படத்தின் அடுத்த பாகம் உருவாகிறது. இந்த படத்திற்கு 'சூது கவ்வும் 2 – நாடும் நாட்டு மக்களும்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இப்படத்தை இயக்குனர் எம்.எஸ்.அர்ஜூன் இயக்குகிறார். இதில் விஜய்சேதுபதிக்கு பதிலாக நடிகர் 'மிர்ச்சி சிவா' நடித்துள்ளார். இவருடன் இணைந்து ராதாரவி, ரமேஷ் திலக், கருணாகரன், எம் எஸ் பாஸ்கர் ஆகிய பலரும் நடித்திருக்கின்றனர். இந்த படத்தை தங்கம் சினிமாஸ் சார்பில் எஸ் தியாகராஜன் மற்றும் திருக்குமரன் என்டர்டெயின்மென்ட் சார்பில் சி.வி. குமார் இணைந்து தயாரிக்கின்றனர்.

இப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் மற்றும் பாடல் வெளியாகி கவனம் பெற்றது. சமீபத்தில் இந்த படம் டிசம்பர் மாதம் திரைக்கு வரும் என தேதி குறிப்பிடாமல் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்தநிலையில் சூது கவ்வும் 2 திரைப்படம் வருகிற டிசம்பர் மாதம் 13ந் தேதி வெளியாகும் என படக்குழு வீடியோ ஒன்றை வெளியிட்டு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

## பிரிவு என்பது துக்கம் மட்டுமல்ல, புதிய அமைதியாகவும் பிறக்கலாம் நடிகர் பார்த்திபன்



இசைப்புயல் என்று அழைக்கப்படும் இசையமைப்பாளர் ஏ.ஆர். ரகுமானை விட்டுப் பிரிவதாக அவரது மனைவி சாய்ரா பானு நேற்று இரவு அறிவித்தார். இதனை சில மணிநேரத்திலேயே ஏ. ஆர். ரகுமானும் உறுதி செய்தார்.

இருவருக்கும் இடையே நிரப்ப முடியாத இடைவெளி ஏற்பட்டுள்ளதால் இந்த விவாகரத்து முடிவை எடுத்திருப்பதாகவும், ஏ.ஆர்.ரகுமானுடனான தனது திருமண பந்தத்தை முறித்து கொள்வதாகவும் சாய்ரா பானு அறிவித்தார்.

ஏ.ஆர்.ரகுமான் சாய்ரா பானு இடையேயான 29 ஆண்டு கால திருமண வாழ்வு முறிந்துள்ளது திரையுலகினருக்கும், ரசிகர்களுக்கும் மிகப்பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இந்த நிலையில், இது குறித்து நடிகரும், இயக்குனருமான பார்த்திபன் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் கூறியிருப்பதாவது:

பிரிவு: இசை ஸ்வரங்கள் பிரிவதால்தான், பிறக்கும் ஒரு நாதமே... குடைக்குள் மழை நானெழுதி கார்த்திக் ராஜா இசைக்க, இசையே பாடியது. பிரிவு என்பது துக்கம் மட்டுமல்ல, புதிய அமைதியாகவும் பிறக்கலாம். நெருக்கம் நிகழ்த்திய சொர்க்கத்தை விட, மூச்சு முட்டும் புழுக்கமாகவும் மாறியதை சற்றே மாற்றி, விலகி நின்று அவரவர் விருப்பம் போல வாழ இனிய வழியுள்ளதா என சம்மந்தப்பட்டவர்கள் ஆராயலாம். ஊர் கூடி உறவை கொண்டாடி வழியனுப்புதல் போலே, ஊர் விலகி 'பிரிவு' என்ற முடிவையும் சமமாய் மதித்து அமைதிக்கு உதவிட வேண்டும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## உலகக் கோப்பை கால்பந்து தகுதி சுற்று: பெருவை வீழ்த்தி வெற்றி பெற்ற அர்ஜென்டினா




23வது உலகக் கோப்பை கால்பந்து போட்டி 2026ம் ஆண்டு ஜூன், ஜூலை மாதங்களில் அமெரிக்கா, கனடா, மெக்சிகோ ஆகிய 3 நாடுகளில் நடக்கிறது. 48 நாடுகள் பங்கேற்கின்றன. போட்டியை நடத்தும் நாடுகளை தவிர மற்ற அணிகள் தகுதி சுற்று மூலமே தேர்வாகும். தகுதி சுற்று பல்வேறு நாடுகளில் நடக்கின்றன.

இதில் தென்அமெரிக்க கண்டத்துக்கான தகுதி சுற்றில் இன்று நடைபெற்ற ஒரு ஆட்டத்தில் அர்ஜென்டினா பெரு அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் அபாரமாக செயல்பட்ட அர்ஜென்டினா 10 என்ற கோல் கணக்கில் பெருவை வீழ்த்தி வெற்றி பெற்றது.

நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் பிரேசில் உருகுவே அணிகள் மோதின. இந்த ஆட்டம் 11 என்ற கோல் கணக்கில் டிராவில் முடிந்தது. இதேபோல் பொலிவியா பராகுவே ஆட்டமும் 22 என்ற கோல் கணக்கில் டிராவில் முடிந்தது.

## பெர்த் டெஸ்ட்; இந்திய அணியின் ஆடும் லெவனில் அஸ்வினா... ஜடேஜாவா...? வெளியான தகவல்



இந்திய கிரிக்கெட் அணி சமீபத்தில் சொந்த மண்ணில் நியூசிலாந்துக்கு எதிராக நடைபெற்ற 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை முழுமையாக இழந்தது. இதையடுத்து இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் (பார்டர்கவாஸ்கர் தொடர்) தொடரில் ஆட உள்ளது. இந்த தொடர் வரும் 22ம் தேதி தொடங்குகிறது.

தற்போது இந்திய அணி உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு முன்னேற ஆஸ்திரேலியா அணிக்கு எதிராக 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 4 போட்டிகளை வென்றாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது. இதனால் இந்த தொடர் ரசிகர்களிடையே மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்தியா ஆஸ்திரேலியா இடையிலான முதல் டெஸ்ட் போட்டி பெர்த்தில் நடைபெறுகிறது. பொதுவாக வெளிநாட்டு மண்ணில் இந்தியா டெஸ்ட் போட்டிகளில் விளையாடினால் இந்திய ஆடும் லெவனில் அஸ்வினை காட்டிலும், ரவீந்திர ஜடேஜாவுக்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இந்நிலையில், ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் போட்டியில் ரவிசந்திரன் அஸ்வின் இந்தியாவின் ஆடும் லெவனில் இடம்பெற உள்ளதாக கூறப்படுகிறது. 3 வேகப்பந்து வீச்சாளர், ஆல்ரவுண்டர் நிதிஷ் குமார் ரெட்டி மற்றும் ரவிச்சந்திரன் அஸ்வினுடன் இந்தியாவின் பவுலிங் லைன் அப் அமைய உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

## பார்வையற்றோருக்கான உலகக் கோப்பை; இந்திய கிரிக்கெட் அணிக்கு பாகிஸ்தான் செல்ல அனுமதி மறுப்பு



பார்வையற்றோருக்கான உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி வரும் 23ந் தேதி முதல் அடுத்த மாதம் 3ந் தேதி வரை பாகிஸ்தானில் நடக்கிறது. இந்த போட்டியில் பங்கேற்க இந்திய அணி பஞ்சாப் மாநிலம் வாகா எல்லை வழியாக பாகிஸ்தான் செல்ல திட்டமிட்டு இருந்தது. ஆனால் பாதுகாப்பு பிரச்சினை காரணமாக இந்திய அணி பாகிஸ்தானுக்கு செல்ல மத்திய அரசு அனுமதி மறுத்துள்ளது.

ஏற்கனவே ஐ.சி.சி. சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டிக்காக இந்திய அணி பாகிஸ்தான் பயணிப்பதற்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய அணி விலகினாலும் பார்வையற்றோர் உலகக் கோப்பைகிரிக்கெட்போட்டிதிட்டமிட்டபடிநடைபெறும் என்று பாகிஸ்தான் பார்வையற்றோர் கிரிக்கெட் சங்கம் தெரிவித்துள்ளது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.